அட்டாளைச்சேனை பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 05 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 12 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பேணப்படுகின்ற பதிவேட்டின்படி காரைதீவு, சம்மாந்துறை பிரதேச சபைகள் மற்றும் கல்முனை, அக்கரைப்பற்று மாநகர சபைகளால் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தை பயன்படுத்துவது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரை பெறவேண்டிய சேவைக் கட்டணம் ரூபா 3,511,874 தொகையாகக் காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,572,756 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையினால், ரூபா 1,939,118 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 49,675 நிதிக்கூற்றுக்களில் மீண்டுவரும் செலவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டில் வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையின் சிபார்சின் பிரகாரம் மீளாய்வாண்டில் அழிக்கப்பட்ட 614 நூலக புத்தகங்களின் பெறுமதியானது ஏடுகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற உழவு இயந்திரப் பெட்டியின் பெறுமதி ரூபா 300,000 கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2005 ஆம் ஆண்டில் சபைக்குச் சொந்தமான மின்சார உபகரணங்கள் இலங்கை மின்சார சபைக்கு வழங்கியமை தொடர்பில் மின்சார சபையிடமிருந்து பெறவேண்டிய ரூபா 350,322 தொகையினை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| கட்டிடங்கள் | 15,408,927 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| தளபாடங்கள் பொருத்துக்கள் | 189,815 | |
| இயந்திரங்களும் பொறிகளும் | 89,590 | |
| கடன்கொடுத்தோர் | 316,421 | மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதம் |

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) IAI/2002/02 அம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | ரூபா 322,850 பெறுமதியான கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நி.பி. 104 | 2005 ஆம் ஆண்டில் காணாமல்போன ரூபா 96,392 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்பு மற்றும் 2015 திசெம்பர் 20 ஆம் திகதி களவாடப்பட்ட ரூபா 170,000 பெறுமதியான சூரிய மின்சக்தியில் இயங்கும் 02 மின்குமிழ்களும் மற்றும் பொருத்துக்களும் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 571 | ரூபா 6,861,073 மொத்தப் பெறுமதியான 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 70 வைப்புக்களை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 6,121,136 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய

வருமானம் ரூபா 1,004,126 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 5,117,010 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 விளம்பரப் பலகைகளுக்கான கட்டண அறவீடு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 126 (VII) (ஊ) இன் பிரகாரம் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 40 விளம்பரப் பலகைகளுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 442,650 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.2 மீன் சந்தை குத்தகை அறவீடு

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீன் சந்தை குத்தகை நிலுவை ரூபா 32,000 தொகை ஒரு வருடமாக அறவிடப்படாது காணப்படுகின்றது.

2.2.3 மாட்டுத் தோல் விற்பனை வருமானம்

மீளாய்வாண்டில் சபையின் கொல்களத்தில் இறைச்சிக்காக 3,328 மாடுகள் அறுவை செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் தோல்களை தோல் உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் தனிநபர் ஒருவரிற்கு இலவசமாக வழங்கியிருந்ததனால் சபை ரூபா 499,200 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

2.2.4 திண்மக் கழிவுகளுக்கான சேவைக்கட்டண அறவீடு

சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள், கடைகள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கும் திண்மக் கழிவுகளுக்கான சேவைக் கட்டணமாக மீளாய்வாண்டில் அண்ணளவாக ரூபா 4,849,750 தொகை அறவிட திட்டமிடப்பட்ட போதிலும், ரூபா 807,010 தொகையை மட்டுமே சபை அறவிட்டிருந்தது.

2.2.5 இறைச்சிக் கடை குத்தகை அறவீடு

2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இறைச்சிக் கடைக் குத்தகை ரூபா 273,300 நான்கு ஆண்டுகளாக அறவிடப்படாது நிலுவையாக காணப்படுகின்றது.

2.2.6 முத்திரைக்கட்டண அறவீடு

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான முத்திரைக் கட்டணம் ரூபா 6,682,374 தொகையை 2017 செப்தெம்பர் 26 ஆந் திகதி வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்பட்ட 05 வாகனங்கள் 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 1,400,000 நிதியைப் பயன்படுத்தி பள்ளக்காடு கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட விலங்குகளின் எலும்புகளை அரைக்கும் நிலையம் மற்றும் அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2017 செப்தெம்பர் 26 ஆந் திகதி வரை பாவனையின்றி காணப்படுகின்றது.

(இ) பொருட் கணிப்பீட்டுச் சபையின் அறிக்கையின்படி 35 வகையைச் சார்ந்த 238 சொத்துக்களின் பற்றாக்குறைகள் காணப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக 2017 செப்தெம்பர் 26 ஆந் திகதி வரை சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ''பலாத்நெகும'' வேலைத்திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை கடற்கரை சிறுவர் பூங்கா மீளாய்வாண்டில் ரூபா 3,073,763 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த வேலைகளான மலசல கூட வசதிகள், வாசல் கதவு, குடி நீர் வசதி, மின்சார வசதிகள், நிழல் மரங்கள் மற்றும் இருக்கைகள் போன்ற வேலைகள் இன்றுவரை பூர்த்தி செய்யப்படாமையினால் இப்பூங்காவைப் பயன்படுத்தும் மக்கள் அதிக சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம் | i. திண்மக் கழிவுகளை தரப்படுத்தி சேகரித்தல்<br>ii. திண்மக் கழிவு சேவைக் கட்டண அறவீடு |